முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1679

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.05.2024**, சனிக்கிழமை

1. வள்ளலே வாழுகின்ற ஞானியே
வரம்தரும் ஆறுமுக ஞான தவசியே
இல்லாமை போக்கி இந்த பேருலகை
எல்லா வளமும் பெற அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே தர்ம ஞான தவசியே
ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென உன் சக்தி பெருகிட
3. வழங்குவேன் குரோதி தகர் திங்களில்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 21 ம் நாள், 04.05.2024, சனிக்கிழமை)
முருகப் பெருமான் யானும்
ஆற்றல் அரங்கனுக்கு கூடிட
முழுமைதரும் வண்ணம் ஞான அறிவுரை ஆசி
4. ஆசிதனை தொடர்ந்து அரங்கனுக்கு உரைப்பேன்
அப்பனே அரங்கன் உன் ஆற்றல்பெருக
அற்புதத்தை யான் நடத்தி வருகின்றேன்
காப்பாக அரங்கன் நீ
5. தருகின்ற ஞானமெல்லாம் கலியில் கனிவாகி
உலக மக்களுக்கு ஞானபலமாகி
ஆகியே உலகோரெல்லாம் ஞானவான்களாக
அற்புதத்தை அவர்களைக்கொண்டே ஆறுமுகன் யான்
6. ஆக்கமுடன் ஞான லோகமாக்கி
இந்த உலகினில் ஞானத்தலைமையும்
ஞானசித்தர் காலமும்
ஞானிகள் ஆட்சியுமாக பெருமாற்றத்தை

7. ஆறுமுகன் யான் பிரணவக்குடிலின்
சக்திகொண்டு சரவணச்சுடர் வழி
உலகமெல்லாம் பரவி சற்குரு உன் நாம வழி
யானே அற்புதத்தை நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—